**செய்தி வெளியீடு எண் 246 நாள் 20.3.2010**

**தெற்காசிய விளையாட்டுகளில் வெற்றி பெற்ற**
**சீனியர் ஆண்கள் கைப்பந்து குழு வீரர்களுக்கு 15 இலட்ச ரூபாய்!**
**ஜூனியர் ஆண்கள் குழு வீரர்களுக்கு 7 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் !**
**ரொக்கப் பரிசுகள்!**
**முதலமைச்சர் கலைஞர் வழங்கினார் !**

பதினோராவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் 2010–பிப்ரவரியில் டாக்கா நகரில் நடைபெற்றது. அப்போட்டியில் இந்திய கைப்பந்து குழு சார்பில் கலந்து கொண்டு வெற்றி பெறும் வீரர்களுக்கு ரொக்கப் பரிசுகள் அளிக்கப்படும் என இந்திய கைப்பந்து கூட்டமைப்பின் தலைவர் பத்மஸ்ரீ டாக்டர் பா.சிவந்தி ஆதித்தன் ஏற்கனவே அறிவித்திருந்தார். அந்த அறிவிப்பின்படி, டாக்காவில் நடைபெற்ற கைப்பந்துப் போட்டிகளில், இந்தியாவின் சார்பில் கலந்துகொண்ட சீனியர் ஆண்கள் கைப்பந்து குழுவினர் தங்கப் பதக்கம் வென்றமைக்காக, அக்குழுவில் இடம்பெற்ற வீரர்களுக்கு மொத்தம் 15 இலட்ச ரூபாயும்; அதேபோல, உலகில் கைப்பந்து விளையாட்டில் ஈடுபடும் 219 நாடுகளில், இந்தியா உட்பட 16 குழுக்கள் தகுதிபெற்ற உலக ஜூனியர் ஆண்களுக்கான சாம்பியன்ஷிப் போட்டி புனே நகரில் நடைபெற்றபோது, அதில் கலந்து கொண்டு, அமெரிக்க ஐக்கிய நாடுகள், ரஷியா, பெல்ஜியம் ஆகிய நாடுகளைச் சேர்ந்த குழுக்களை வென்று, முதன்முறையாக நான்காம் இடம் பெற்ற, இந்திய ஜூனியர் ஆண்கள் கைப்பந்துக் குழு வீரர்களுக்கு மொத்தம் 7 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயும் பரிசுத் தொகையாக, முதலமைச்சர் கலைஞர் இன்று வழங்கி, வெற்றி பெற்ற வீரர்களுக்கு வாழ்த்துகள் கூறினார்.

இன்று (20.3.2010) தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வின் போது, துணை முதலமைச்சர் டாக்டர் மு.க. ஸ்டாலின், பத்மஸ்ரீ டாக்டர் பா.சிவந்திஆதித்தன் ஆகியோர் உடன் இருந்தனர்.

வெளியீடு –

செய்தி மக்கள் தொடர்புத்துறை

சென்னை 9